# பொருளியல்

## உற்பத்திக் காரணிச் சந்தை



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி : 4.0**

**தேர்ச்சிமட்டம் : 4.6**

# உற்பத்திக் காரணிச் சந்தை

## காரணிச் சந்தை வரைவிலக்கணம்

உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பான ஏற்பாடு காரணிச் சந்தை எனப்படும்.

## காரணிகளுக்கான கேள்வி

* நிறுவனத்துறையினர் உற்பத்தி செயற்பாட்டிற்காக காரணிச் சேவைகளை வீட்டுத்துறையினரிடமிருந்து கொள்வனவு செய்யும் செயற்பாடு காரணிகளுக்கான கேள்வி எனப்படும்.
* உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி வழிவந்த கேள்வி/ நேரில் கேள்வி எனப்படும்.
* முடிவுப் பொருட்களுக்குக் கேள்வி ஏற்படுவதனூடாக காரணிகளுக்குக் கேள்வி ஏற்படுவதனால் அதனை வழிவந்த கேள்வி என அழைப்பார்.

**உதாரணம் :**

1. கட்டட நிர்மாணத்திற்காகக் காணப்படும் கேள்வியின் அடிப்படையில் அதன் ஊழியர்களுக்கு கேள்வி ஏற்படுதல்.
2. கணினிகளுக்குக் காணப்படும் கேள்வியின் அடிப்படையில் கணினி மென்பொருளுக்கு கேள்வி ஏற்படுதல்.

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வியைத் தீர்மானிப்பவை


உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வியைத் தீர்மானிப்பது அவற்றின் விலைகளாகும்.

**அவ்விலைகளாவன :**

| | காரணி | விலை |
|---|---|---|
| 1 | நிலம் | வாடகை |
| 2 | உழைப்பு | கூலியும் சம்பளங்களும் |
| 3 | மூலதனம் | வட்டி |
| 4 | முயற்சி | இலாபம் |

⇒ உற்பத்திக் காரணிகளின் கேள்வி அளவிற்கும் அவற்றின் விலைக்கும் இடையே எதிர்க்கணிய தொடர்பு காணப்படும். அதாவது காரணிகளின் விலை உயர்வடைய காரணிகளுக்கான கேள்வி அளவு குறையும். விலை வீழ்ச்சியடைய காரணிகளுக்கான கேள்வி அளவு உயர்வடையும்.

⇒ இதனால் உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி வளையி இடமிருந்து வலமாக கீழ்நோக்கி சரிந்து செல்லும்.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


## காரணிகளுக்கான நிரம்பல்

⇒ நிறுவனத்துறையில் உற்பத்தி செயற்பாட்டிற்காக வீட்டுத்துறையினரால் விற்பனை செய்ய/ வழங்கல் செய்ய தயாராகவுள்ள காரணிகளின் அளவு உற்பத்திக் காரணிகளின் நிரம்பல் எனப்படும்.

⇒ உற்பத்திக் காரணிகளின் நிரம்பல் அதன் விலையினால் தீர்மானிக்கப்படும்.


⇒ உற்பத்திக் காரணிகளின் விலைக்கும் காரணிகளின் அளவிற்கும் இடையில் நேர்க்கணிய தொடர்பு காணப்படும்.

⇒ இதனால் இந்நிரம்பல் வளையி இடமிருந்து வலமாக மேல்நோக்கி சரிந்து செல்லும்.




## காரணிச் சந்தையின் சமனிலை

⇒ காரணிச்சந்தையின் சமனிலையானது காரணிகளுக்கான கேள்வி, நிரம்பல்களினால் தீர்மானிக்கப்படுகின்றது.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## காரணிகள் உழைக்கும் வருமானம்

காரணிகள் உழைக்கும் வருமானங்களைப் பின்வரும் இருவகையாக பாகுபடுத்தலாம்.

01 மாற்றல் வருமானம்/ மாற்றல் கட்டணம்

02 பொருளியல் வாடகை/ சிக்கன வாடகை

## மாற்றல் வருமானங்கள்

உற்பத்திக் காரணியொன்றினை அவற்றின் தற்போதைய வேலைவாய்ப்பில் தொடர்ந்து வைத்திருக்கும் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவு மாற்றல் வருமானம் எனப்படும்.

மாற்றல் வருமானங்களிலும் பார்க்க குறைந்த வருமானங்களைப் பெறும் உற்பத்திக் காரணி உயர்ந்த வருமானத்தைப் பெறக்கூடிய வேறு தொழிலுக்கு மாற்றப்பட முடியும். இதனைத் தவிர்ப்பதற்கு காரணிகளுக்கு ஆகக்குறைந்த வருமானமாக மாற்றல் வருமானம் வழங்கப்படுகின்றது. எனவே காரணியொன்றின் நிகழ்காலப் பயன்பாட்டின் அமையச் செலவானது மாற்றல் வருமானமாகக் கருதப்படுகின்றது.

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)


கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொருளியல் வாடகை

குறிப்பிட்ட ஓர் உற்பத்திக் காரணியை தற்போதுள்ள பயன்பாட்டிலேயே வைத்திருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஆகக்குறைந்த கொடுப்பனவுக்கு மேலாக வருமானம் ஒன்று உழைக்கப்படுமாயின் அத்தகைய மேலதிக வருமானம் பொருளியல் வாடகை ஆகும்.

எனவே எந்தவொரு உற்பத்திக் காரணியினதும் நிகழ்கால உழைப்பு, மாற்றல் கொடுப்பனவுக்கு மேலதிகமாக இருக்குமாயின் அவ்வாறு மேலதிகமாக இருக்கும் உழைப்பு வாடகை ஆகும்.






வரைபில்

- $OP_FEQ_F$ என்பது காரணிகளின் மொத்த வருமானமாகும்.
- $OAEQ_F$ என்பது மாற்றல் வருமானத்தைக் குறிக்கின்றது.
- $AP_FE$ என்பது பொருளியல் வாடகையைக் குறிக்கின்றது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## காரணியின் நிரம்பல் நெகிழ்ச்சியும் காரணி வருமானங்களும்

காரணிகளின் நிரம்பல் நெகிழ்ச்சி வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு காரணிகள் பெறும் வருமானங்களான பொருளியல் வாடகை மற்றும் மாற்றல் வருமானங்கள் வேறுபடும்.

1. பூச்சிய நிரம்பல் நெகிழ்ச்சியும் காரணி வருமானங்களும்
2. நெகிழ்வற்ற நிரம்பலும் காரணி வருமானங்களும்
3. ஒருமை நிரம்பல் நெகிழ்ச்சியும் காரணி வருமானங்களும்
4. நெகிழ்வுள்ள நிரம்பலும் காரணி வருமானங்களும்
5. பூரண நெகிழ்வுள்ள நிரம்பலும் காரணி வருமானங்களும்

### 01 பூச்சிய நிரம்பல் நெகிழ்ச்சியும் காரணி வருமானங்களும்





NOTE :- நிலம் எனும் உற்பத்திக் காரணி பூச்சிய நிரம்பல் நெகிழ்ச்சியைக் கொண்டிருப்பதால் அது பொருளியல் வாடகையை மட்டும் பெறுகின்றது.

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


## 02

**நெகிழ்வற்ற நிரம்பலும் காரணி வருமானங்களும்**




## 03

**ஒருமை நிரம்பல் நெகிழ்ச்சியும் காரணி வருமானங்களும்**






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


## 04

### நெகிழ்வுள்ள நிரம்பலும் காரணி வருமானங்களும்




## 05

### பூரண நெகிழ்வுள்ள நிரம்பலும் காரணி வருமானங்களும்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பல்தேர்வு வினாக்கள்

1. பின்வருவனவற்றில் எது வழிவந்த கேள்வியாகும்.
   1) ஒரு மாணவன் புத்தகமொன்றை கொள்வனவு செய்தல்.
   2) விவசாயத்தின் பொருட்டு நிலம் ஒன்று கொள்வனவு செய்யப்படுதல்.
   3) நோயாளி ஒருவர் மருந்துப் பொருட்களை வாங்குதல்.
   4) தந்தையொருவர் தனது பிள்ளைக்காக விளையாட்டு உபகரணம் ஒன்றினை வாங்குதல்.
   5) வீட்டுப் பாவனைக்காக சலவை இயந்திரம் ஒன்றினை வாங்குதல்.

2. பின்வருவனவற்றுள் மாற்றல் வருமானமாகக் கருதப்படக்கூடியது எது?
   1) உற்பத்திக் காரணி உழைக்கும் மொத்த வருமானம்.
   2) உற்பத்திக் காரணி உழைக்கின்ற மேலதிக வருமானம்.
   3) உற்பத்திக் காரணி உழைக்கும் மேலதிக நேர வருமானம்.
   4) காரணியொன்றின் நிகழ்காலப் பயன்பாட்டின் அமையச் செலவு.
   5) காரணியொன்றின் பயன்பாட்டிற்கான வருமானம்.

3. காரணியொன்றின் மொத்த உழைப்புக்கள் முழுவதும் சிக்கன வாடகையாக அமையக்கூடிய சந்தர்ப்பம் எது?
   1) காரணி நிரம்பல் நெகிழ்வுள்ளதாக அமையும் போது.
   2) காரணிகளின் நிரம்பல் பூரண நெகிழ்வற்றதாக அமையும் போது.
   3) காரணிகளின் நிரம்பல் பூரண நெகிழ்வுள்ள போது.
   4) காரணிகளின் கேள்வி பூரண நெகிழ்வற்றதாக உள்ள போது.
   5) காரணிகளின் கேள்வி பூரண நெகிழ்வுள்ளதாக அமையும் போது.

4. காரணி நிரம்பல் வளையி நெகிழ்வற்ற நிலையில் இருந்து நெகிழ்வுள்ளதாக மாற்றமடையும் போது யாது நிகழும்?

| | *மாற்றல் கட்டணம்* | *பொருளியல் வாடகை* |
|---|---|---|
| 1) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2) | குறையும் | குறையும் |
| 3) | அதிகரிக்கும் | குறையும் |
| 4) | குறையும் | அதிகரிக்கும் |
| 5) | மாறாது | மாறாது |

5. ஓர் உற்பத்திக் காரணியானது குறிப்பிட்ட ஒரு தொழிலில் இருந்து மற்றொரு தொழிலுக்கு மாற்றமடையக்கூடிய சந்தர்ப்பம்.
   1) பொருளியல் வாடகையினை உழைக்காத போது.
   2) மாற்றல் கட்டணத்தினை மட்டும் உழைக்கும் போது.
   3) பொருளியல் வாடகையில் ஒரு பகுதயை மட்டும் உழைக்கும் போது.
   4) மாற்றல் கட்டணத்திற்கு மேலதிகமாக உழைக்காத போது.
   5) மாற்றல் கட்டணத்தினைக் கூட உழைக்காத போது.

## ஒப்படை

உமது பிரதேசத்தில் உள்ள விவசாயி ஒருவர் எவ்வெவ் உற்பத்திக் காரணிகளுக்கு கேள்வியை ஏற்படுத்துவான் என்பதனைப் பட்டியற்படுத்தி அவற்றுக்கான வருமானங்களையும் குறிப்பிடுக.

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk